SINGAPORE – CAMBRIDGE
General Certificate of Education Ordinary Level

# தமிழ் B

தாள் 2

**1152/2**

# TAMIL B

Paper 2

**SPECIMEN PAPER**

*With effect from 2024 examination*

**1 hour**

**தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்**

1 குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்துகொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

2 வினாக்கள் அனைத்துக்கும் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு வினாவிற்கும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டுமே மிகப் பொருத்தமான விடை. அந்த விடைக்குரிய எழுத்துள்ள (A, B, C அல்லது D) வட்டத்தை 'கிளிக்' செய்யவும்.

3 தேர்வாளரின் கட்டளையைக் கேட்ட பிறகு **'Start'** என்னும் குறியை அழுத்தவும்.

**INSTRUCTIONS TO CANDIDATES**

1 Follow all instructions carefully.

2 Answer all questions. There are four options for each question. One of them is the most appropriate answer. Make your choice (A, B, C or D) and click your chosen option.

3 Click **'Start'** when the invigilator gives you the signal.

இவ்வினாத்தாள் 11 அச்சிடப்பட்ட பக்கங்களையும் 1 அச்சிடப்படாத பக்கத்தையும் கொண்டுள்ளது.

Singapore Examinations and Assessment Board

©MOE

## ‘அ’ பிரிவு

**A1 முன்னுணர்வுக் கருத்தறிதல்** **(10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவல்களில் கோடிட்ட இடங்கள் ஒவ்வொன்றையும் நிரப்புவதற்குரிய நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

**CLOZE PASSAGE**

Read the following passages carefully and choose the most appropriate answer from the 4 options given. Make your choice (A, B, C or D) and click your chosen option.

<u>பனுவல் 1</u>

மகாத்மா காந்தி நேர்மையாக நடந்துகொள்வதில் ஆழ்ந்த **(Q1)**____________ கொண்டிருந்தார். இளம்வயதில் அவர் பார்த்த ‘அரிச்சந்திரன்’ என்னும் நாடகமே அதற்கு முக்கிய **(Q2)**____________ அமைந்தது. ஒருமுறை பள்ளியில் நடைபெற்ற உடற்பயிற்சி வகுப்பிற்கு மகாத்மா காந்தி தாமதமாக **(Q3)**____________. அவர் தமது உடற்பயிற்சி ஆசிரியரிடம் தாமதமாக வந்ததற்கான உண்மையான காரணத்தைக் கூறினார். **(Q4)**____________ ஆசிரியர் அதை நம்ப மறுத்து அவருக்குத் தண்டனை வழங்கினார். உண்மையைக் கூறியபோதும் தமக்குக் கிடைத்த தண்டனையை **(Q5)**____________ மகாத்மா காந்தி வருந்தினார். அன்றுமுதல் அவர் நேர்மையோடு நேரந்தவறாமையையும் கடைப்பிடித்தார். மகாத்மா காந்தியைப் போல நாமும் உயர்பண்புகளுடன் வாழ்வோம்.

**வினாக்கள்**

1
- (A) ஆசை
- (B) எண்ணம்
- (C) மனவுறுதி
- (D) நம்பிக்கை

2
- (A) பயனாக
- (B) விளைவாக
- (C) காரணமாக
- (D) நோக்கமாக

3
- (A) ஓடினார்
- (B) சென்றார்
- (C) சேர்ந்தார்
- (D) அடைந்தார்

4
- (A) எனவே
- (B) ஆகவே
- (C) ஆனால்
- (D) அதனால்

5
- (A) பார்த்து
- (B) எண்ணி
- (C) உணர்ந்து
- (D) அனுபவித்து

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

<u>பனுவல் 2</u>

விவசாயி ஒருவர் தமது நிலத்தில் விளைச்சல் குறைவாக இருந்ததைக் கண்டு வருந்தினார். அவர் அதைப் பற்றித் தம் மனைவியிடம் **(Q6)**____________. விவசாயியின் மனநிலையைப் புரிந்துகொண்ட அவரது மனைவி, “கவலைப்படாதீர்கள்; நல்லதையே நினைப்போம். நிச்சயமாக **(Q7)**____________ நல்ல வழி பிறக்கும்,” என்று ஆறுதல் கூறினாள். அவளது நம்பிக்கை அளிக்கும் வார்த்தைகளை **(Q8)**____________ விவசாயிக்குப் புதுத்தெம்பு பிறந்தது. அவர் உற்சாகத்தோடு தமது வேலையைச் செய்யப் புறப்பட்டார். **(Q9)**____________ ஊர்த்தலைவர் விவசாயியைக் காண வந்தார். அவர் விவசாயியின் நிலத்தில் விளைந்தவற்றை அதிக விலை **(Q10)**____________ வாங்குவதாகக் கூறினார். அதைக் கேட்ட விவசாயி பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

**வினாக்கள்**

6

(A) கூறினார்
(B) அறிவித்தார்
(C) தெரிவித்தார்
(D) முறையிட்டார்

7

(A) நமது
(B) நமக்கு
(C) நம்மை
(D) நம்மால்

8

(A) கேட்ட
(B) சொன்ன
(C) நினைத்த
(D) சோதித்த

9

(A) மேலும்
(B) அதோடு
(C) அதனால்
(D) அப்போது

10

(A) தேடி
(B) பெற்று
(C) அமைத்து
(D) கொடுத்து

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

‘ஆ’ பிரிவு

**B2 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படித்து அதனையொட்டி அமைந்துள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும். ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

**(4 மதிப்பெண்கள்)**

Read the advertisement carefully and choose the most appropriate answer from the 4 options given. Make your choice (A, B, C or D) and click your chosen option.

**சிங்கப்பூர் இளையர் எழுத்தாளர் கழகம்**
**பெருமையுடன் வழங்கும்**
**‘கதைக்களம்’**
**இளையர்களுக்கான சிறுகதை தொடர்பான போட்டிகள் 2024**

இடம்: டெக் கீ சமூக மன்றம்
நேரம்: மாலை 5 மணிமுதல் 7 மணிவரை
நாள்: 15 ஜூன் 2024 (சனிக்கிழமை)
போட்டியில் கலந்துகொள்ளத் தகுதி பெறுவோர்:
16 வயதுமுதல் 21 வயதுக்கு உட்பட்டோர்



சிறப்புரை : ‘சிறுகதை இலக்கியம்’
பேச்சாளர் : திரு மு. சந்திரசேகர் (சிங்கப்பூர் இளையர் எழுத்தாளர் கழகத்தின் துணைத்தலைவர்)

<u>சிறுகதை விமர்சனம் எழுதும் போட்டி</u>

- கொடுக்கப்படும் ஒரு சிறுகதையைப் பற்றிய உங்கள் விமர்சனத்தை 200 சொற்களுக்குள் எழுத வேண்டும்.
- முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு $50 ரொக்கப் பரிசு வழங்கப்படும்

<u>சிறுகதை எழுதும் போட்டி</u>

- கொடுக்கப்படும் தொடக்க வரியைப் பயன்படுத்தி உங்கள் சிறுகதையை 250 முதல் 300 சொற்களுக்குள் எழுத வேண்டும்.
- முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு $60 ரொக்கப் பரிசு வழங்கப்படும்

போட்டிக்குப் பதிவுசெய்வதற்குரிய இணையப்பக்க முகவரி www.kathaikalam.com.sg

11 இந்நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ள போட்டிகள் யாரால் ஏற்பாடு செய்யப்படுகின்றன?

(A) டெக் கீ சமூக மன்றத்தினரால்
(B) சிங்கப்பூர் இளையர் எழுத்தாளர் கழகத்தினரால்
(C) 16 வயதுமுதல் 21 வயதுக்கு உட்பட்ட இளையர்களால்
(D) சிங்கப்பூர் இளையர் எழுத்தாளர் கழகத்தின் துணைத்தலைவரால்

12 சிறுகதையைப் பற்றி அறிந்துகொள்வதில் ஆர்வமுள்ளோர் கலந்துகொள்ள வேண்டிய அங்கம் எது?

(A) கதைக்களம்
(B) சிறுகதை எழுதும் போட்டி
(C) சிறுகதை இலக்கியம் சிறப்புரை
(D) சிறுகதை விமர்சனம் எழுதும் போட்டி

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

பின்வரும் சுவரொட்டியைக் கருத்தூன்றிப் படித்து அதனையொட்டி அமைந்துள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும். ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) வட்டத்தை 'கிளிக்' செய்யவும். **(6 மதிப்பெண்கள்)**

Read the following poster carefully and choose the most appropriate answer from the 4 options given. Make your choice (A, B, C or D) and click your chosen option.


**சிங்கப்பூர் ஆற்றோரத்தில் உல்லாசத் திருவிழா!**

நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கச் சிங்கப்பூர் ஆற்றோரத்திற்கு வாருங்கள்!

**போட் கீ, கிளார்க் கீ, ராபர்ட்சன் கீ ஆகிய இடங்களுக்கு இடையே பல்வேறு உற்சாகமூட்டும் நடவடிக்கைகள் இடம்பெற உள்ளன.**

வெள்ளிக்கிழமைகளில் கிளார்க் கீயில் அமைக்கப்படும் கேளிக்கைச் சந்தையில் புதுமையான விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறும்.
(மாலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரை)





வார இறுதி நாள்களின்போது போட் கீயிலுள்ள உணவகங்களில் உணவு உண்ணும் வாடிக்கையாளர்கள் கண்களுக்கு விருந்தளிக்கும் வண்ண விளக்குகளைக் கண்டு ரசிக்கலாம்!
(இரவு 7 மணிமுதல் 8 மணிவரை)

- வார இறுதி நாள்களின்போது ராபர்ட்சன் கீ நடைபாதையில் குழு விளையாட்டுகளும் கண்காட்சியும் இடம்பெறும்.
- குழு விளையாட்டுகளில் வெற்றி பெறுவோருக்குச் செந்தோசா உல்லாச விடுதியில் 2 நாள்கள் தங்குவதற்கான பற்றுச்சீட்டுகள் காத்திருக்கின்றன.
(காலை 9 மணிமுதல் இரவு 10 மணிவரை)



மேலும் விவரங்கள் அறிய எங்கள் இணையப்பக்கத்தை நாடுங்கள்.

13 உல்லாசத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டதன் நோக்கம் என்ன?

(A) உல்லாசமாகப் பொழுதைக் கழிக்க மக்களை ஊக்குவிப்பது
(B) உற்சாகமூட்டும் நடவடிக்கைகளில் பங்குபெற மக்களை அழைப்பது
(C) போட் கீ, கிளார்க் கீ, ராபர்ட்சன் கீ ஆகிய இடங்களுக்கு மக்கள் செல்வதை ஊக்குவிப்பது
(D) வார இறுதி நாள்களின்போது சிங்கப்பூர் ஆற்றோரங்களில் நடைபெறும் நடவடிக்கைகளை அறிவிப்பது

14 வண்ண விளக்குகளைக் காண விரும்புபவர் என்ன செய்ய வேண்டும்?

(A) சிங்கப்பூர் ஆற்றோரத்திற்குச் செல்ல வேண்டும்
(B) கிளார்க் கீயிலுள்ள உணவகங்களில் உணவு உண்ண வேண்டும்
(C) ராபர்ட்சன் கீயில் நடைபெறும் கண்காட்சிக்குச் செல்ல வேண்டும்
(D) வார இறுதி நாள்களில் போட் கீயிலுள்ள உணவகங்களில் உணவு உண்ண வேண்டும்

15 செந்தோசா உல்லாச விடுதியில் தங்குவதற்கான பற்றுச்சீட்டு யாருக்கு வழங்கப்படும்?

(A) போட் கீயிலுள்ள உணவகங்களுக்குச் செல்லும் வாடிக்கையாளர்களுக்கு
(B) ராபர்ட்சன் கீயில் இடம்பெறும் கண்காட்சியில் கலந்துகொள்வோருக்கு
(C) ராபர்ட்சன் கீயில் நடைபெறும் குழு விளையாட்டுகளில் வெற்றி பெறுவோருக்கு
(D) கேளிக்கைச் சந்தையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவோருக்கு

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

‘இ’ பிரிவு

**C3 தெரிவுவிடைக் கருத்தறிதல்** **(10 மதிப்பெண்கள்)**

பின்வரும் பனுவல்களைக் கருத்தூன்றிப் படித்து அதனையொட்டி அமைந்துள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும். ஒவ்வொரு வினாவுக்கும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அந்த விடையின் எழுத்துக்குரிய (A, B, C அல்லது D) வட்டத்தை ‘கிளிக்’ செய்யவும்.

**COMPREHENSION**

Read the following passages carefully and choose the most appropriate answer from the 4 options given. Make your choice (A, B, C or D) and click your chosen option.

பனுவல் 1

வேலனும் அவன் மனைவியும் தினமும் பாட்டி ஒருவரிடமிருந்து திராட்சைப்பழங்கள் வாங்குவார்கள். வேலன் ஒவ்வொரு முறையும் பழங்களை எடைபோட்டு வாங்கியபின் அவற்றில் ஒரு பழத்தைத் தன் வாயில் போட்டுச் சுவைப்பான். அதன்பின், “இந்தத் திராட்சைப்பழம் புளிப்பாக இருக்கிறதே! நீங்கள் சாப்பிட்டுப் பாருங்கள்,” என்று ஒரு பழத்தை எடுத்து அந்தப் பாட்டியிடம் கொடுப்பான்.

உடனே பாட்டி பழத்தைச் சுவைத்துவிட்டு, “பழம் சுவையாகத்தானே உள்ளது,” என்பார். வேலனும் எதுவும் சொல்லாமல் பழத்தை வாங்கிக்கொண்டு செல்வான். இதைக் கவனித்த அவனது மனைவி, “பழங்கள் இனிப்பாக இருந்தும் நீங்கள் ஏன் அவை சுவையாக இல்லையென்று தினமும் பாட்டியிடம் சொல்கிறீர்கள்?” என்று வியப்புடன் கேட்டாள். அதற்கு வேலன், “அந்தப் பாட்டி தாம் விற்கும் பழங்களில் ஒன்றைக்கூட உண்ணாமல் அனைத்தையும் விற்றுவிடுகிறார். நான் இவ்வாறு செய்வதால் அவர் ஒரு பழத்தையாவது சாப்பிடுகிறார் அல்லவா!” என்றான். இதைக் கேட்ட அவனது மனைவி உள்ளம் நெகிழ்ந்தாள்.

16 வேலனின் மனைவி ஏன் தன் கணவனின் செயலைக் கண்டு வியப்படைந்தாள்?

(A) வேலன் புளிப்பான பழங்களை வாங்கியதால்
(B) வேலன் இனிப்பான பழத்தைப் புளிக்கிறது என்று கூறியதால்
(C) வேலன் அடிக்கடி திராட்சைப்பழங்களை எடைபோட்டு வாங்கியதால்
(D) வேலன் எதுவும் சொல்லாமல் பழங்களுக்குப் பணத்தைக் கொடுத்ததால்

17 வேலன் திராட்சைப்பழங்கள் வாங்கும்போதெல்லாம் அவற்றைப் பற்றிக் குறை கூறக் காரணம் என்ன?

(A) வேலனுக்குப் பாட்டி இனிப்பான பழங்களைத் தராதது
(B) வேலனுக்குத் திராட்சைப்பழங்களின் சுவை பிடிக்காதது
(C) பாட்டி தாம் விற்கும் திராட்சைப்பழங்களைப் பற்றி அறிவது
(D) பாட்டி தாம் விற்கும் திராட்சைப்பழங்களை உண்ண வைப்பது

18 வேலனுடைய மனைவியை மனம் நெகிழச் செய்தது எது?

(A) வேலன் தந்த பழத்தைப் பாட்டி சாப்பிட்டது
(B) வேலன் பாட்டியின்மீது அன்பு கொண்டிருந்தது
(C) வேலன் திராட்சைப் பழங்களை விரும்பி வாங்கியது
(D) வேலன் பாட்டியின் வறுமையைப் போக்க எண்ணியது

<u>பனுவல் 2</u>

பத்திரிக்கையாளர் ஒருவர் புகழ்பெற்ற பணக்காரரிடம், “உங்களைவிடப் பணக்காரரான ஒருவரைச் சந்தித்திருக்கிறீர்களா?” என்று கேட்டார். அதற்கு அப்பணக்காரர், “ஆம், ஒருவர் இருக்கிறார். பல ஆண்டுகளுக்குமுன் நான் வேலையை இழந்து பணமின்றித் தவித்தேன். ஒருநாள் கடைவீதியில் செய்தித்தாள் வாங்க விரும்பினேன். ஆனால், என்னிடம் பணமில்லை. இதைக் கவனித்த செய்தித்தாள் விற்றுப் பிழைக்கும் சிறுவன் ஒருவன் அதை எனக்கு இலவசமாகக் கொடுத்தான். சில மாதங்கள் கழித்து அதே இடத்திற்கு நான் சென்றபோது மீண்டும் அச்சிறுவன் அன்றைய செய்தித்தாளை என்னிடம் இலவசமாகக் கொடுத்தான்.

பின்னர், நான் பணக்காரரானபோது இளைஞனாக வளர்ந்திருக்கும் அச்சிறுவனைத் தேடிக் கண்டுபிடித்தேன். நான் அவனிடம், “முன்பு நீ எனக்கு செய்த உதவிக்குக் கைம்மாறு செய்ய விரும்புகிறேன். உனக்கு என்ன வேண்டும் என்று கேள்,” என்றேன். அதற்கு அவன், “நான் ஏழையாக இருந்தபோது உங்களுக்கு உதவினேன். நீங்களோ பணக்காரராக ஆன பிறகே எனக்கு உதவ நினைக்கிறீர்கள்,” என்றான். “அப்போதுதான் என்னைவிட அவன்தான் பணக்காரன் என்பதை உணர்ந்தேன். ஒருவருக்கு உதவுவதற்குப் பணக்காரராக இருக்க வேண்டும் என்பதில்லை என்றும் நல்ல மனம் ஒன்றே போதும் என்றும் உணர்ந்துகொண்டேன்,” என்றார்.

19 பணக்காரர் எதற்காகத் தமக்கு உதவிய சிறுவனைத் தேடிச் சென்றார்?

(A) அவனை மீண்டும் காண வேண்டும் என்பதற்காக
(B) அவன் தமக்குத் தக்க நேரத்தில் உதவியதற்காக
(C) அவனால் தாம் பெற்ற பயனை எடுத்துக் கூறுவதற்காக
(D) அவன் தமக்குச் செய்த உதவிக்குக் கைம்மாறு செய்வதற்காக

20 செய்தித்தாள் விற்ற சிறுவனின் செயல் பணக்காரருக்கு எதனை உணர்த்தியது?

(A) பலனை எதிர்பார்க்காமல் உதவுவது நன்மை தரும்
(B) ஒருவர் செய்த உதவியை என்றும் மறக்கக்கூடாது
(C) உதவுவதற்குப் பணத்தைவிட நல்ல உள்ளமே முக்கியம்
(D) பணம் இல்லாதபோதும் பிறருக்கு உதவி செய்ய வேண்டும்

முற்றும்

**BLANK PAGE**

*Copyright Acknowledgements:*

The Singapore Examinations and Asses*sment Board has made every effort to trace copyright holders, but if we have inadvertently overlooked any, we will be pleased to make the necessary arrangements at the first opportunity.